**Starting time 12.42 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 171/2018**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 20.11.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால், ஆமாம். தாவா சொத்து ஒரே இடத்தில் உள்ளதா என்றால், தனித்தனியாக இருக்கிறது. புல எண். 206/4C-ல் உள்ள கிணற்றிலிருந்து பிரதிவாதி அவருடைய இதர நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என்றுதான் வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம். 16.02.1998 தேதியன்று நானும் பிரதிவாதியும் ஒரே நபரிடமிருந்து இரு சொத்துக்களை இரு கிரய ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்றோம் என்றால், ஆமாம். என்னுடைய கிரய ஆவணமான வா.சா.ஆ.1-ல் கணேசன் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோரிடமிருந்து நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் 88-1/2 செண்ட் நிலமும் 61 செண்ட் நிலமும் இரு இன சொத்துக்களாக கிகரயம் வாங்கியுள்ளேன் என்றால், ஆமாம்.

2. அந்த பத்திரத்திலேயே 206/4C-ல் உள்ள கிணற்றில் ¼ பங்கு கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். அதில் 4 அடி அகல பாதை கிணறு வரையிலும் பொது பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். நீங்களும், நானும் போகவர பொது

பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் மேற்படி கிணற்றிலிருந்து பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இதர நிலங்களுக்கு என்னுடைய நிலமான 61 செண்ட் நிலத்தில் வழியாக பைப் பதித்து தண்ணீர் எடுத்துக்கொள்ள பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3. நான் கிரயம் பெற்ற தேதியன்றே பிரதிவாதியும் அதே சர்வே எண்ணில் 32-1/2 செண்ட் நிலமும் கிரயம் பெற்றார் என்றால், ஆமாம். இரண்டு ஆவணமும் ஒரே நாளில்தான் பதிவானது என்றால், ஆமாம். எங்கள் இருவருக்குமே அந்த இரு ஆவணம் குறித்து தெரியும் என்றால், ஆமாம். பிரதிவாதியின் பத்திரத்திலும் மேற்படி கிணற்றிலிருந்து நீரும், நாங்களும் மேற்படி 0.32-1/2 செண்ட் நிலத்தின் வழியாகவும் நாளது தேதியில் என்னிடம் கிரயம் பெறும் பெருமாளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 206-4B-ல் உள்ள 61 செண்ட் நிலத்தின் வழியாக உமக்கும், எங்களுக்கும் பாத்தியப்பட்ட பொது கிணற்று நீரை உமக்கும் எங்களுக்கும் சொந்தமான இதர நிலங்களுக்கு சிமெண்ட் பைப் பதித்து தண்ணீர் எடுத்து செல்லும் உரிமை உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், விற்றவர் அவ்வாறு எழுதியுள்ளார்.

4. என்னுடைய பத்திரத்திலும் இவ்வாறுதான் எழுதி உள்ளது என்றால், ஆமாம். புல எண். 207/5B ஆனது என் தாத்தா பிரதிவாதிக்கு உயில் மூலம் கொடுத்த சொத்து என்றால், ஆமாம். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 1 ஏக்.20 செண்ட். நானும் பிரதிவாதியும் ஒரே நாளில் குடும்ப பொதுநிதியில் இருந்துதான் தனிதனியாக கிரயம் பெற்றோம் என்றால், இல்லை. ஏற்கனவே பிரதிவாதிக்கு உயில் மூலம் 1 ஏக்.21 செண்ட் நிலம் இருப்பதால் 206/4B-ல் பிாரதிவாதி அவரது பெயருக்கு 32 -1/2 செண்ட் நிலம் பெற்றுக் கொண்டார் என்றாலும், என் பெயருக்கு 1 ஏக் 51 செண்ட் நிலம் கிரயமாக பெறப்பட்டது என்றாலும், ஆமாம்.

5. உயில் சொத்து பிரதிவாதிக்கு இருப்பதால்தான் என் பெயரில் குடும்பா பொது நிதியில் இருந்து என் பெயரில் அதிகமாக பெறப்பட்டது என்றால்., வாங்கியதை அவரவர்

பயன்படுத்தி வருகிறோம், பிரித்துக் கொளள்வில்லை. என் தாத்தா எழுதி வைத்த சொத்தில் உள்ள கிணறு பாறை மற்றும் நீர் வசதி இல்லாத கிணறு என்பதால் 2 கிரயம் பெறும் போது அதில் உள்ள கிணற்றிலிருந்து இதர நிலங்களுக்கு தண்ணீர் எடுத்துசெல்லும் உரிமையை பிரதிவாதிக்கு கொடுத்து கிரயம் பெறப்பட்டது என்றால், அவ்வாறு இல்லை. உண்மைக்கு புறம்பாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

6. பிரதான சாலையிலிருந்து பிரதிவாதியின் உயில் சொத்திற்கு செல்ல ஒரு பாதை அமைந்துள்ளது என்றால், 4, 5 பேர் சேர்ந்து பாதை அமைத்துள்ளார்கள். அந்த பாதையை பிரதிவாதி கணேசனின் மனைவி அமுதா, பெருமாள், தருமர் (எ) ராமராஜ், பெரியண்ணன் ஆகியோர் உயில் சொத்திற்கு செல்வதற்கு பாதை அமைத்துக் கொண்டார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 03.06.2005 தேதியன்று அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் பிரதிவாதியும் கிரயம் பெற்றபோது 206/4C-ல் உள்ள கிணற்றில் தலா ¼ பங்கு கிரயம் பெற்றுள்ளோம் என்றால், ஆமாம். மீதி 2/4 கணேசனிடம் இருந்தது என்றால், ஆமாம்.

7. நானும் பிரதிவாதியும் மீதமுள்ள கிணறு பாகம் முழுவதையும் 03.06.2005 தேதியன்று ஒரே பத்திரமாக கிரயம் பெற்றுக் கொண்டோம் என்றால், ஆமாம். பொதுப்பாதை பத்திரமும் அதே தேதியன்றுதான் பதிவானது என்றால், தெரியாது. இரு பத்திரங்களும் அடுத்தடுத்த பத்திரங்களாக பதிவு செய்யப்பட்டது என்றாலும், அதுபற்றி நேரில் தெரியும் என்றாலும், சரியல்ல. என் பத்திரம் பதிவானவுடன் நான் பத்திர அலுவலகத்தில் இருந்து வந்துவிட்டேன். என்னுடைய பத்திரம் எத்தனை மணிக்கு பதிவானது என்றால், தெரியாது. 10 வருடம் ஆகிவிட்டதால் தெரியாது

8. என்னுடைய பத்திரம் மாலை 4 மணியிலிருந்து 5 மணிக்குள்ளாகத்தான் பதிவாகியுள்ளது என்றாலும், பொது பாதை பத்திரமும் அதே நேரத்தில்தான் பதிவாகியுளளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால், சரியல்ல. பிரதிவாதி கிரயம் பெற்றதும், உயில் மூலம் பெற்றதும் 1.51 செண்ட் நிலம்தான் என்றாலும், நான் கிரயம் பெற்ற சொத்தின் விஸ்தீரணமும் 1.51 செண்ட் தான் என்றாலும், நான் கிரயம் பெற்ற சொத்து தனி சொத்து. பொதுவாக வாங்கி பாகம் செய்து கொண்டால் கிரயப் பத்திர செலவு அதிகமாகும் என்பதால் தனிதனியாக கிரயம் பெற்று கொண்டோம் என்றால், பொது சொத்து பிரிக்கவில்லை, தனிதனியாக வாங்கிய சொத்தை கிரயம் செய்து கொண்டோம். உயிலில் பிரதிவாதிக்கு எழுதி வைத்த சொத்தை தான் பொது சொத்து என்னு சொல்கிறேன் என்றால், ஆமாம்.

9. என்னுடைய வழக்கில் உயில் சொத்து பொது சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால், தெரியாது. பொது பாதை பத்திரத்திலும் கிரயம் பெற்ற சொத்திலிருந்து உயில் சொத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்லும் உரிமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி தெரியாது. அந்த பொது பாதை பத்திரத்தில் பொதுபாதையின் வழியாக கிணற்றிலிருந்து உயில் சொத்தின் மேற்கு கோடி வரையிலும் பிரதிவாதி பதித்துள்ள சிமெண்ட் பைப்பின் மூலமாக தண்ணீர் எடுத்துச் செல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல புல எண் 206/4B-ல் தான் குடியிருக்கிறேன் என்றால், ஆமாம்.

10. நான் கிரயம் பெற்ற நிலத்திந்றகும், பிரதிவாதியின் நிலத்திற்கும் இடையே சஞ்சீவி என்பவரின் நிலம் இருக்கிறது என்றால், ஆமாம். வா.சா.ஆ.6 நான் தாக்கல் செய்துள்ள ஆவணமா என்றால், ஆமாம். வா.சா.ஆ.6-ல் பொது கிணற்றிலிருந்து பிரதிவாதியின் உயில் சொத்து வரையிலும் எதை குறிப்பிட்டு காட்டியுள்ளேன் என்றால், தெரியாது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.14 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.